| O.S.No. 50/2025 | PW2: திரு. சுரேஷ் த/பெ. திரு. பொன்னன் | 04-03-2026 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. எனக்கு பிரதிவாதி உறவினர், வாதி உறவினர் இல்லை. எனக்கும் பிரதிவாதி குடும்பத்திற்கும் சின்ன சின்ன பிரச்சனை உள்ளதா என்றால் இல்லை. பிரதிவாதி ராஜேஷ் மகாதேவனிடம் வாங்கிய கடனுக்கு அசல் வட்டியுடன் சேர்த்து ரூ.5,00,000/-த்துக்கு வழக்கு போட்டுள்ளார் என்றால் அசல் மட்டுமே ரூ.5,00,000/- ஆகும். என்னுடன் லட்சுமிநாராயணன் என்பவர் கையெழுத்து போட்டார். இன்னொரு மகாதேவன் பாண்டினை எழுதினார்.

2. பணம் வங்கி மூலமாக செலுத்தப்பட்டதா என்றால் கையில் நேரடியாக கொடுக்கப்பட்டது. கடன் 2022-ம் ஆண்டு கொடுக்கப்பட்டது. பிரதிவாதி ராஜேஷ் என் முன்னிலையில் ரூ.22,0000/- வாதிக்கு வட்டி கொடுத்தார் என்றால் இல்லை. ஏற்கனவே வாதியிடம் வாங்கிய கடனிற்கு நானும், பிரதிவாதியும் வாதிக்கு பணம் கொடுத்தோம் என்றாலும், தற்போது இல்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பாண்டில் எழுதியவர் என்ற இடத்தில் மகாதேவன் கையெழுத்தும், சாட்சி என்ற இடத்தில் என்னுடைய கையெழுத்தும் லட்சுமிநாராயணனின் கையெழுத்தும் உள்ளது.

3. எதற்காக கடன் வாங்கினார் என்றால் தொழில் ரீதியாக வாங்கினார். பாண்டில் தொழில் ரீதியாக கடன் வாங்கினார் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு எழுதவில்லை. பிரதிவாதியிடம் எனக்கு கொடுக்கல் வாங்கல் இல்லை. நான் வாதியிடம் கடன் வாங்கி செலுத்திவருகிறேன் என்றாலும், வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

4. பாண்டில் கண்டுள்ள சங்கதிகள் எதுவும் என் முன்னிலையில் நடக்கவில்லை என்றாலும், நான் பாண்டில் சாட்சி கையெழுத்து போட்டுவிட்டு வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை.

ஒம்/- சுரேஷ்

சாட்சியின் கையொப்பம்

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.04 12:05:06 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**

**செய்யாறு.**